

பாமாலை 300 என் ஆவி ஆன்மா தேகமும்

1 என் ஆவி ஆன்மா தேகமும்
இதோ படைக்கிறேன்
என்றும் உம் சொந்தமாகவும்
பிரதிஷ்டை செய்கிறேன்

2 ஆ இயேசு வல்ல ரட்சகா
உம் நாமம் நம்புவேன்
ரட்சிப்பீர் மா தயாபரா
உம் வாக்கை வேண்டுவேன்

3 எப்பாவம் நீங்க உறுப்பு
தந்தேன் சமூலமாய்
போராட்டம் வெற்றி சிறப்பு
படைக்கலன்களாய்

4 நான் உம்மில் ஜீவித்தல் மகா
மேலான பாக்கியம்
தெய்வ சுதா என் ரட்சகா
என் ஜீவனாயிரும்

5 என் நாதா திரு ரத்தத்தால்
சுத்தாங்கம் சொந்தமே
ஆனேன் உம் தூய ஆவியால்
பலி நான் உமக்கே